1987 ஏப்ரல் 11]

திருப்பத்தூர் தொகுதியில் சிப்காட் தொழிற்பேட்டை

589—(*வினா எண் 9624) திரு. எஸ். பி. மணவாளன்: மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பத்தூர் தொகுதியில் சிப்காட் தொழிற்பேட்டை நிறுவ ஆய்வு ஏதும் செய்யப்பட்டதா?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) திருப்பத்தூர் வட்டத்தில் தொழில் இணையம் அமைக்கும் திட்டம் ஒன்று பரிசீலனையில் உள்ளது. அதற்கான இடம் தேர்ந்தெடுக்கும் பணி தொடரப் பட்டது.

திரு. எஸ். பி. மணவாளன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பத்தூர் பகுதியிலே சிப்காட் தொழிற்பேட்டை அமைக்கும் பணி தொடரப்பட்டது என்று அமைச்சர் அவர்கள் கூறினார்கள். அந்த ஆய்வுப் பணி எப்பொழுது முடிவடையும்? அங்கு எப்பொழுது தொழிற்பேட்டை துவங்கப்படும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவர் அவர்களே, வட ஆற்காடு மாவட்டம், திருப்பத்தூர் வட்டம், மணல்வாடி, சின்னமேட்டூர் ஆகிய கிராமங்களில் சிப்காட் தொழிற்பேட்டை அமைப்பதற்கான இடம் பார்வையிடப்பட்டது. ஆனால், ஆய்வு அறிக்கை இதுவரையிலே தயாரிக்கப்படவில்லை.

திரு. எஸ். பி. மணவாளன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 7-வது ஐந்தாண்டுத் திட்டத்திலே தமிழகத்திலே 11 தொழிற்பேட்டைகள் அமைய இருக்கின்றன என்றும் அதிலே ஒன்று வட ஆற்காடு மாவட்டம் என்றும் 1984 ஆம் ஆண்டு தொழில் துறையினுடைய அரசாணையிலே குறிப்பிடப்பட்டது. அது தவிர, திருப்பத்தூர் பகுதியில் சில ஆண்டுகளுக்கு முன்பாக வேலையில்லாத் திண்டாட்டத்தின் காரணமாக நக்சலைட்ஸ் என்ற பெயரால் சில அருவருக்கத்தக்க நிகழ்ச்சிகள் நடை பெற்றன. முக்கியமாக, அப்பொழுதிருந்த மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. நாராயணன் அவர்களும், டி.ஐ.ஜி. திரு. தேவாரம் அவர்களும் அங்கே தொழில் வாய்ப்பு ஏற்படுத்த வேண்டுமென்ற முக்கியத்துவத்தைக் கருதி, மண்டல்வாடி, சின்னமேட்டூர்

பகுதியிலே ஆய்வு செய்து அறிக்கை அனுப்பினார்கள். அதன் முக்கியத்துவத்தைக் கருதி உடனடியாக அங்கே தொழிற்பேட்டை அமைக்க அமைச்சர் முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவர் அவர்களே, அந்த எண்ணம் அரசுக்கு இருக்கிறது. ஆனால், அதற்கான ஆய்வுகள் இன்னும் தொடங்கப்படவில்லை; தொடங்க ஆலோசிக்கலாம்.

திரு. தி. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிப்காட் தொழிற்பேட்டை அமைப்பதற்கு மைய அரசு என்ன விதிமுறைகள் வைத்திருக்கிறது; ஒரு மாவட்டத்திற்கு 2 சிப்காட் தொழிற்பேட்டை அமைப்பதற்குத் தடை இருக்கிறதா? வட ஆற்காடு மாவட்டத்திலே திருப்பத்தூர் வட்டத்திலே அதை அமைக்க அரசு ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, ஏற்கெனவே வட ஆற்காட்டில் இராணிப்பேட்டையில் நல்லபடி வளர்ந்திருக்கிற சிப்காட் மையமாக இருக்கிறது. மேலும் ஒன்று திருப்பத்தூரில் உருவாக்க வேண்டுமென்ற எண்ணம் அரசுக்கு இருக்கிறது. தற்போது ஆய்வு அறிக்கை தயாராக இல்லை. ஆய்வு அறிக்கை தயாரிக்கப்பட்ட பிறகு அது பற்றி ஆலோசிக்கலாம்.

டாக்டர் ந. மாசிலாமணி: பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு தொழிற் துறை அமைச்சரவர்களுக்கு திருப்பத்தூரிலும், வாணியம்பாடியிலும் நீண்டகால உறவு இருப்பதால், அந்தப் பகுதியில் தனிக் கவனம் செலுத்தி தொழிற்பேட்டை அமைக்க ஆவன செய்வார்களா?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, தமிழ் நாட்டில் எனக்கு உறவு இல்லாத ஊரே கிடையாது.

திரு. கே. பாலாஜி: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, 1968-69 ஆம் ஆண்டு பேரறிஞர் அண்ணா அவர்கள் முதலமைச்சராக இருந்த நேரத்தில் காஞ்சிபுரம் பகுதியில் சிப்காட் தொழிற்பேட்டையைக் கொண்டுவர ஏற்பாடுகள் செய்யப்பட்டு,

1987 ஏப்ரல் 11]

ஓரிக்கை கிராமத்திலும், பொன்னேரிக்கு அருகாமையிலும் ஏராள மான நிலங்கள் கையகப்படுத்தப்பட்டன. பேரறிஞர் அண்ணா அவர்கள் மறைந்த பிறகு அந்தத் தொழிற்பேட்டை இராணிப் பேட்டைக்குச் சென்றுவிட்டது. அந்தத் தொழிற்பேட்டை அங்கே இருப்பதைப் பாராட்டுகிறோம். மேலும் ஒரு தொழிற் பேட்டையை அண்ணாவின் நினைவாக காஞ்சியில் அமைக்க வேண்டுமென்று அன்புடன் கேட்டுக்கொள்கிறேன். அதை மாண்பு மிகு அமைச்சரவர்கள் செய்வார்களா?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னது போல ஏற்கெனவே பொன்னேரியைத் தேர்ந்தெடுத்திருக் கிறார்கள். இப்போது பொன்னேரிக்குப் பக்கத்தில் கும்மிடிப் பூண்டியில் இருக்கிறது. கும்மிடிப்பூண்டியும் அவருடைய மாவட்டத்தில்தான் இருக்கிறது. எனவே அவர்கள் மகிழ்ச்சி அடையலாம்.

நீலகிரி மாவட்டம், கூடலூர் பேரூராட்சியில் 'ஹெல்லன் குடிநீர்த் திட்டம்'.

390—(* வினா எண் 11160) திரு. கு. ரமணி: மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நீலகிரி மாவட்டம், கூடலூர் பேரூராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் 'ஹெல்லன் குடிநீர் திட்டத்தை' செயல்படுத்துவதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது உண்மையா?

(ஆ) ஆம் எனில், திட்டத்தை உடன் நிறைவேற்ற அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. கு. ரமணி: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நீலகிரி மாவட்டம் கூடலூர் ஹெல்லன் குடிநீர்த் திட்டம் என்ற ஒரு திட்டமே இல்லையென்று அமைச்சரவர்கள் சொல்லு கிறார்களா என்று புரியவில்லை. அந்தத் திட்டம் இருக்கிறது. அந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதற்குப் புறப்பட்டபோது, பிர்லா போன்ற முதலாளிகளின் தோட்டத்தின் வழியாக பைப்பை புதைக்க வேண்டுமென்ற காரணத்தால், சர்வே பண்ணக்கூட